**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**S.C.No.203/2024**
**வழக்கு சாட்சி PW3**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.பெரியசாமி அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கண்ணம்மாள் | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : பொன்னுச்சாமி | கணவர் பெயர் | : பழனிச்சாமி |
| கிராமம் | : நாகப்பன்பட்டி | வயது | : சுமார் 70 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 02.03.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**(CMP No.01/2025 மனுவானது கடந்த 24.11.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை)**
**( 2வது குற்றம் சாட்டப்பட்டவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை பாரதிய குடிமக்கள் சட்டம் பிரிவு 355ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

<u>1, 2 குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை</u>

பெருமாள் என்பவர் எனக்கு என்ன உறவு என்றால் ? மகன் என்ற உறவாகிறது. எதிரிகள் ரவிக்குமார், மணிகண்டன் என்ன உறவாகிறது என்றால்? எனது கொழுந்தியாள் மகன். எங்களுக்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் பழனியம்மாள் வீடு சம்பந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் ? சரிதான். அந்த வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றால் ? சரிதான். சம்பவம் நடந்த அன்று எனது மகன் குடிபோதையில் இருந்தார் என்றால் ? இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும், அன்றயை தினம் எனது மகன் மது அருந்தியிருந்தார் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரம் என்ன நேரம் என்றால் ? இரவு 7.45 மணி இருக்கும். சம்பவம் நடந்த பகுதியானது இருட்டான பகுதி என்றால் ? லைட் எறிந்து கொண்டிருந்தது. யார் வீட்டில் லைட் எறிந்து கொண்டிருந்தது என்றால் ? முத்தம்மாள் வீட்டில் லைட் எறிந்து கொண்டிருந்தது. நான் சொல்வதை போல் முத்தம்மாள் என்பவருடைய வீடு அந்த பகுதியில் இல்லை என்றால் ? சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடம் வீட்டு வாசலில் தான் சம்பவம் நடந்தது என்றால்? வீதியில் தான் சம்பவம் நடந்தது. எனது மகன் சம்பவ தினத்தன்று குடி போதையில் இருந்ததாலும், எனது மகன் எதிரிகளிடம் சண்டை போட்டுவிட்டு

திரும்பி வந்தபோது கீழே விழுந்து எனது மகனுக்கு காயம் ஏற்பட்டுவிட்டது என்றாலும் ? சரியல்ல. அ.சா.1 எனது மகன் என்பதால் எனது மகனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. சம்பவம் நடந்தபோது நான் சம்பவயிடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 10 நபர்கள் சேர்ந்து எனது மகனை பிடித்துக் கொண்டபோது எனது மகனை குத்திவிட்டார்கள். நான் சொல்வது தவறு என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH Digitally signed by C JAYAPPRAKASH Date: 2026.03.02 13:15:55 +0530

**சார்பு நீதிபதி**
**ஒட்டன்சத்திரம்**